7 பிப்ரவரி 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 5ம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **வேற்றுமையில் ஒற்றுமை**

# ஆண்டவர் பணியின் சேவகன்



சீமோனுடைய மாமியாரையும் அவர் வீட்டு வாயில்முன் கூடியிருந்த அந்நகர மக்களையும் இயேசு குணமாக்கினார். எங்கும் பரவியது வியப்பூட்டும் இயேசுவின் அருட்செயல்கள். அவர் செல்லும் நகர-கிராம மக்களின் ஆவலை இது தூண்டியது. அவரது புகழும் செல்வாக்கும் பரவியது. பாலைநிலத்திற்கு அவர் தனியாக சென்ற போதுகூட நூற்றுக்கணக்கானோர் பின்சென்றனர். செபக்கூடத்தில் பேய் பிடித்தவனைக் குணப்படுத்தியதை அடுத்து, சீமோன் வீட்டில் அருட்செயல் நடந்தேறியது. இயேசுவின் வார்த்தை அல்லது தொடுதல் மூலம் குணமாவதைக் கண்டு மக்கள் வியப்பால் கதிகலங்கி போயிருந்தனர். யாரால் இவ்வாறு செய்ய முடியும்?

ஆயினும், அம்மக்களின் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் கண்டு, இயேசு அங்கேயே தங்கி விடவில்லை. தந்தையாகிய கடவுள் தம்மிடம் ஒப்படைத்தப் பணியை மேற்கொள்ள மற்ற நகரங்களுக்கும் அவர் சென்றார். கடவுளின் அருளையும் வார்த்தையையும் இன்னும் பலர் இதனால் கண்டடைவார்கள். தம்மைப் பின்தொடரும் சீடர்கள் அல்லது வழிபோக்கர்களின் பாராட்டுகள் தலைவனுக்குத் தேயைில்லை. தோளில் தட்டிக் கொடுப்பதற்கோ புகழுக்கோ பெருமைக்கோ அவர் ஏங்கவில்லை. உலகச் செல்வாக்கு அவருக்கு ஒன்றுமில்லை, தமது பணியை நிறைவேற்றுவதே அவருக்கு முக்கியம்.

“வலுவற்றவர்களுக்கு வலுவற்றவனானேன். எப்படியாவது ஒரு சிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன்” எனக் கூறும் போது தமது லட்சியப் பணித்துவத்தை புனித பவுல் எடுத்துரைக்கிறார். ஆண்டவர் பணியை உண்மையாகவும் உளப்பூர்வமாகவும் மேற்கொள்ளுபவர்களை இன்றும் அவர் பார்க்கின்றார். சொந்த வாழ்க்கையையே பணயம் வைத்து, அவர்கள் நற்செய்தியைப் போதித்தனர். நற்செய்தியின் சேவகனாக இருப்பதன் பலனை இக்காலத்தில் நாம் கண்டு வருகிறோம்.

பவுல் மற்றும் இறைப்பணியின் இதர ஊழியர்களைப் போல், நமது சொந்த இறைப்பணியிலும் நாமும் சோர்வும் மனஅழுத்தமும் கொள்கிறோம். தற்போதைய நடப்பு சூழ்நிலையில் ஏற்படும் சவால்களையும் போராட்டங்களையும் கவனத்தில் கொள்ளும் போது, நமது இந்த நிலையை ஆண்டவர் புரிந்து கொள்வார். உலகின் நடப்பு நிலவரங்களைப் பாரக்கும் போது கிறிஸ்துவின் பணியாளர்களை, சீமோன் வீட்டில் செய்தது போல நம்மையும் இயேசு அரவணைப்பார் என்பது நிச்சயம். ஆறுதலாக அவர் நம்மைத் தொடுவது, நமக்குப் புத்தெழுச்சியைத் தரும். நாம் செய்யும் இறைப்பணியை இயேசு அருள்பொழிவாரா! அவரது திராட்சை தோட்டத்தில் தொடர்ந்து சுறுசுறுப்பாக பணியாற்றுவோம். ✜

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

“எப்படியாவது ஒரு சிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.”

(1கொரி. 9, 22)

**இன்றைய வாசகங்கள்:**

யோபு 7, 1-4. 6-7;
திபா. 146, 1-6.
1கொரி. 9, 16-19. 22-23.
மாற்கு 1, 29-39.

INTERNAL CIRCULATION ONLY
BUL 06/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org